ALPHA MIND POWER

# NEWSLETTER



August
2018

## *From Guruji's desk….*



My dear Alpha Siddha,

In this letter I wish to address one very important social issue which has affected all of us in the last few weeks.

I am referring to the 12 year old girl who was abused by more than 17 men in an apartment complex in Chennai.

It is very difficult to believe how something like this can go on for seven months without anyone being aware of it.

When a survey reported that India is the most unsafe country for women to live in, I felt quite angry. I wondered how they could come to a conclusion like this. But when I heard about the above incident, all my anger was replaced only by shame and guilt. What kind of society are we creating? How can we sit back and allow such things to happen? Is there anything that we can do to prevent such things from happening atleast in future?

As I kept thinking about this issue, one question kept coming up in my mind. Such crimes are not totally new and we have been hearing about them from time immemorial. But the frequency and violence that we see today is something which really causes concern. What is the reason?

We must understand that such crimes cannot be committed by all. It is only a perverted mind which has such thoughts and which is contemplating such acts which can indulge in such actions. How does a mind get so perverted? What are the inputs that create such an urge?

The first cause that we can think of is the provocative material which is very easily available on the net today and can be viewed with just a mobile phone. Can something be done to ban such sites in India?

Second is the delay in rendering justice and the lack of severe punishment. The anger that we all feel today slowly abates with time until some other such incident comes up. This has to change. Immediate and severe punishment alone will have the impact to stop many from thinking of such crimes in future.

Third is the lack of awareness in children to understand that something wrong is happening in their life and they need to bring it to the notice of their parents or elders. Here, we also wonder why the parents were not able to spot the inevitable changes in that girl.

Parents and others in the family have to be more watchful and sensitive towards any changes that may be happening in the lives of their children. And children should also feel comfortable to share any such information with their parents immediately without any hesitation.

Let us do what we can in meditation to change this. Include the following points in your Alpha meditation to create a safe society in future for all of us:

1. Think of all those who are at present involved in such crimes or contemplating them and shower white light on them. Let the white light purify their minds.
2. The Government takes some action to prevent the sites and social media posts which provide provocative information.
3. Children become more aware and are smart enough to protect themselves.
4. Parents are more aware of any negative influences on their children and provide the required support.
5. If such a crime comes to light, the punishment is immediate and severe.
6. The same survey reports that India is the safest country for women.

Let us join together to create a better society.
Blessings,

**Srimatha**



### *Rishikesh Camp With Guruji*

***29.09.2018 to 08.10.2018***

**BABAJI CAVE :** 30.09.2018 & 01.10.2018 (2 days)

**SHANTAGNI** : 03.10.2018 to 07.10.2018 (5days)
Reprogram your mind -
Residential Retreat at Ashram

You can attend either one or both the programs.
Eligibility is Alpha Level 1

For further enquiries please contact AMP office: +919841272146



***Guruji with Alpha Siddhas at Sanjeevani Workshop in Dubai***

எனதருமை ஆல்ஃபா சித்தர்களே,

இந்த கடிதத்தில் நம் எல்லோரையும் கடந்த சில வாரங்களாக பாதித்த ஒரு விஷயத்தைப் பற்றி எழுத விரும்புகிறேன்.

சென்னையில் ஒரு குடியிருப்பு வளாகத்தில் 12 வயது சிறுமியை பதினேழு பேருக்கும் மேற்பட்டவர்கள் தவறாக பயன்படுத்திய தகவலைப் பற்றித் தான் சொல்கிறேன். இப்படிப் பட்ட ஒரு கொடுமை ஏழு மாதங்களாக நடந்தும் யாருக்குமே அது தெரியவில்லை என்பதை நம்புவதே கடினமாக இருக்கிறது.

ஒரு கணக்கெடுப்பில் பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பற்ற நாடு இந்தியா என்று அறிவித்தபொழுது எனக்கு உண்மையாகவே சற்று கோபமாக இருந்தது. இப்படி ஒரு முடிவுக்கு எப்படி வந்தார்கள் என்று கூட யோசித்தேன். ஆனால் மேற்சொன்ன நிகழ்வைப் பற்றி கேள்விப்பட்டபொழுது அந்த கோபம் மறைந்து அவமானமும் குற்ற உணர்வும் மட்டுமே மிஞ்சின.

இப்படிப்பட்ட சமூகத்தை தானா நாம் உருவாக்கி இருக்கிறோம்? இதையெல்லாம் பார்த்துக்கொண்டு நாம் எப்படி சும்மா இருப்பது? எதிர்காலத்திலாவது இது போன்ற கொடுமைகள் நடக்காமல் தடுக்க நம்மால் ஏதேனும் செய்ய முடியுமா?

இது குறித்து சிந்தித்தபொழுது ஒரு கேள்வி என் மனதில் எழுந்தது. இது போன்ற குற்றங்கள் முற்றிலும் புதியன அல்ல. நினைவு தெரிந்ததிலிருந்து நாம் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்றாலும் இன்று இவை மிக அதிகமாகவும் கொடூரமாகவும் நடப்பதைக் காணும்பொழுது மனம் நிச்சயம் கவலை கொள்கிறது. இதற்கு காரணம் என்ன?

ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரும் இது போன்ற குற்றங்களை செய்வது இல்லை. இது போன்ற எண்ணங்கள் நிறைந்து இது போன்ற செயல்களை மனதில் அசைபோடும் வக்கிரமான மனம் கொண்டவர்களால் தான் இவற்றை செய்ய முடியும். ஒரு மனம் எப்படி இந்த அளவுக்கு கீழ்தரமாக சிந்திக்க முடியும்? இப்படி ஒரு உந்துதலை உருவாக்கும் விஷயங்கள் எவை?

முதல் காரணமாக நமக்கு தோன்றுவது இன்று வலைதளங்களில் மிக சுலபமாக ஒரு மொபைல் போனிலேயே பார்க்கும் விதமாக கிடைக்கும் தவறான வீடியோக்கள் மற்றும் செய்திகள் தான். இது போன்ற விஷயங்களை இந்தியாவில் தடை செய்ய ஏதேனும் வழி உண்டா?

இரண்டாவது காரணம், நியாயம் வழங்குவதில் ஏற்படும் தாமதம் மற்றும் தண்டனை கடுமையாக இல்லாமை. இன்று நம் மனதில் ஏற்படும் கோபம் நாளடைவில் குறைந்து விடுகிறது. இது போன்ற சம்பவம் மறுபடியும் ஏற்படும்பொழுது தான் அது மீண்டும் தலைதூக்குகிறது. இது மாற வேண்டும். உடனடியாக கொடுக்கப்படும் கடுமையான தண்டனை மட்டும் தான் எதிர்காலத்தில் வேறு யாரும் இது போன்ற குற்றங்களைப் பற்றி நினைப்பதை கூட தவிர்க்க செய்யும்.

மூன்றாவது காரணம், சிறுவர்களுக்கு போதிய அளவுக்கு தெளிவு இல்லாதது. தங்கள் வாழ்வில் ஏதோ தவறாக நடக்கிறது என்பதை அறிந்து அதை பெற்றோர் அல்லது பெரியவர்களிடம் சொல்ல வேண்டும் என்ற தைரியம் இல்லாதது. இந்த இடத்தில் நம் மனதில் எழும் இன்னொரு கேள்வி அந்த பெண்ணிடம் நிச்சயமாக இருந்திருக்க கூடிய மாற்றங்களை எப்படி பெற்றோர்களால் அத்தனை நாட்களும் புரிந்து கொள்ள முடியவில்லை?

பெற்றோர்களும் குடும்பத்தில் உள்ள மற்றவர்களும் தங்கள் வீட்டு குழந்தைகளிடம் ஏற்படும் மாற்றங்களை புரிந்து கொள்வதில் கவனமாக இருக்க வேண்டும். அது போலவே குழந்தைகளும் இது போல் எது நடந்தாலும் உடனடியாக தங்களது பெற்றோரிடம் சொல்லமுடியும் என்ற பாதுகாப்பு உணர்வை பெற்றோர் அளிக்க வேண்டும்.

இதையெல்லாம் மாற்ற நமது தியானத்தில் முடிந்ததை செய்வோம். உங்கள் ஆல்ஃபா தியானத்தின் பொழுது கீழ்கண்ட விஷயங்களை சேர்த்துக்கொள்ளுங்கள். எதிர்காலத்தில் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குவோம்:

1. தற்சமயம் இது போன்ற குற்றங்களை செய்து கொண்டிருப்பவர்கள் அல்லது செய்ய நினைத்துக் கொண்டிருப்பவர்களை மனதில் நினைத்து அவர்கள் மீது வெள்ளை நிறம் செலுத்துங்கள். வெள்ளை நிறம் அவர்கள் மனதை தூய்மைபடுத்தட்டும்.
2. இந்த உந்துதலை உருவாக்கும் வலைதளங்கள் மற்றும் பதிவுகளை தடுக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கிறது.
3. குழந்தைகள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு விஷயம் புரிந்தவர்களாக இருக்கிறார்கள்.
4. தங்கள் குழந்தைகளிடம் ஏற்படும் தவறான பாதிப்புகளை உடனடியாக தெரிந்து கொண்டு பெற்றோர்கள் தகுந்த பாதுகாப்பை தருகிறார்கள்.
5. இது போன்ற குற்றம் நடந்தால், அதற்குரிய தண்டனை கடுமையாகவும் உடனடியாகவும் கொடுக்கப்படுகிறது.
6. அதே கணக்கெடுப்பு பெண்கள் வாழ்வதற்கு மிக சிறந்த நாடு இந்தியா என்று அறிவிக்கிறது.

வாருங்கள் நாம் சேர்ந்து தியானம் செய்வோம். ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவோம்.

ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**

## ANNOUNCEMENT

**'MANAME NALAMA'**
GURUJI'S PROGRAM ON POTHIGAI TV !
8.15 am Monday to Friday
You can also watch from mobile app **'DD POTHIGAI LIVE'**

## அறிவிப்பு

**மனமே நலமா**

பொதிகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 8.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை
மொபைல் ஆப் **'DD POTHIGAI LIVE'** மூலமும் காணலாம்.

## குருஜியுடன் ரிஷிகேஷ் முகாம்

**29.09.2018 முதல் 08.10.2018**

**பாபாஜி குகை** : 30.09.2018 & 01.10.2018 ( 2 நாட்கள்)
**சாந்தக்னி** : 03.10.2018 & 07.10.2018 ( 5 நாட்கள்)

மனதை தூய்மைபடுத்து - ஆசிரமத்தில் நடக்கும் வகுப்பு

நீங்கள் ஒன்று அல்லது இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம்

**தகுதி** : ஆல்ஃபா கட்டம் 1

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : +919841272146

**ஆல்ஃபா அனுபவம் -தேவிகா,**

**ஐஸ்வர்யம்** வகுப்பிற்கு பிறகு என்னிடமும் எனது கணவரிடமும் கடன் வாங்கி திரும்ப தராதவர்கள் பெயர்களை எல்லாம் எழுதி வைத்தேன். அதற்கு ஐஸ்வர்ய சக்தி அனுப்பி வந்தேன். ஒரு நண்பர் ஒன்றரை வருடங்கள் முன்பு 5 இலட்சங்கள் வாங்கி கொடுக்கவே இல்லை. இன்று அதை கொண்டு வந்து கொடுத்தார். ஐஸ்வர்யம் தியானம் கற்று கொடுத்த ஸ்ரீமாதாவிற்கு நன்றி




**ரிஷிகேஷ் யாத்திரை அனுபவம் - பிருந்தா**

மாதாஜியுடனும் ஆல்பா சித்தர்களுடனும் **ரிஷிகேஷ் யாத்திரை** என்பது மறக்க முடியாத ஒன்றாகும். ஆசிரமம், அருகில் ஒடும் கங்கை, ஆசிரமத்தின் சுத்தமான சூழ்நிலை, நேரத்திற்கு கிடைக்கும் ஆரோக்கியமான உணவு, எல்லாமே மறக்க முடியாதவை. பாபாஜி குகை, ஹரித்துவார், எங்கு சென்றாலும் கங்கை நம்முடன் கைகோர்த்து வருவது போலவே இருக்கும். அனைத்தும் மறக்க முடியாத நினைவுகள். ஸ்வாமி தயானந்த சரஸ்வதி ஆசிரமத்தின் தியான அறையின் சக்தி மிகவும் அற்புதமானது. அந்த இடத்தில் தியானம் செய்வது உண்மையிலேயே மிகவும் அற்புதமான அனுபவம் தான். அங்கு முதன் முதலில் எனர்ஜி கிளென்சிங் மியுசிக் கேட்டபொழுது என் கண்களில் கண்ணீர் வழிந்தது. இது ஒரு நிரந்தரமான சந்தோஷம்.

**ஆல்ஃபா அனுபவம் - கோர்ரிஸ், கோவை**

இந்திய அரசிடம் இருந்து பரதநாட்டியத்திற்கான உதவித்தொகை கிடைத்ததை பெருமிதத்துடனும் தாழ்மையுடனும் சொல்லிக் கொள்கிறேன். நான் தேர்ந்தெடுத்த பயணத்தில் மேலும் ஒரு சிறிய வெற்றி. **ஆல்ஃபாவுக்கு** நன்றி. ஆல்ஃபா இல்லாமல் நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது.

**நவாக்ஷரி மந்திரம் அனுபவம் - சந்தோஷ் பூரி, தில்லி.**

என் நெருங்கிய தோழிக்கு பக்கவாதம் ஏற்பட்டது. அவளது வலது பக்கம் முடங்கி விட்டது குரலும் போய் விட்டது. நானும் எனது கணவரும் அவளுக்காக **நவாக்ஷரி மந்திரம்** சொல்லி வந்தோம். எனக்கு மிகுந்த மன வருத்தம். அவளை சென்று பார்த்தேன். அவளால் பேச முடியவில்லை. அவள் அருகிலேயே அமர்ந்து சிறிது நேரம் மந்திரம் சொன்னேன். கனத்த இதயத்துடன் திரும்பி வந்தேன். என்னுடன் அவள் போனில் பேசுவது போல் தியானத்தில் கண்டு வந்தேன். ஒரு நாள் அவளது கணவருக்கு போன் செய்து அவளைப் பற்றி விசாரித்தேன். அவர் “அவளுடனேயே பேசுங்கள்” என்று கூறியபொழுது மிகவும் சந்தோஷப்பட்டேன். எல்லோரது நன்மைக்காகவும் சொல்லக்கூடிய நவாக்ஷரி மந்திரத்தை நமக்கு தந்த குருஜிக்கு எனது நன்றி!

**ஆல்ஃபா அனுபவம் - ஜெயா**

**சஞ்சீவனி** வகுப்பின் பலனை கண்டு வியக்கிறேன். சில மாதங்களுக்கு முன்பு அதில் கலந்து கொண்டேன். குருஜியின் அறிவுரைப்படி தினமும் இரவு தூங்கப் போகும் பொழுது அதை கேட்டும் வருகிறேன். இப்பொழுது யோசித்துப் பார்த்தால் எனது உடல் நலம் மிகவும் சிறப்பாக இருப்பதை உணர்கிறேன். முன்னர் யோகா பயிற்சி செய்து வந்தேன். ஆனால் முழுமையாக செய்ய முடியவில்லை. இப்பொழுது உடலை நன்கு வளைக்க முடிகிறது. களைப்பு ஏற்படுவது இல்லை. ஆரோக்கியம் சிறப்பாக இருக்கிறது. டாக்டரிடம் செல்வது முற்றிலும் நின்று விட்டது. நன்றி குருஜி.

**ஆல்ஃபா அனுபவம் - சாந்தகுமாரி**

5 வருடங்கள் முன்னால் ஆல்ஃபாவில் சேர்ந்தேன். எல்லா வகுப்புகளையும் முடித்து விட்டேன். ஆனால் எப்பொழுதும் எதிர்மறையாக பேசும் எனது கணவரை நினைத்து எந்நேரமும் கவலைப் பட்டேன். அவர் ஆல்ஃபா வகுப்பில் சேரவும் மறுத்து விட்டார். கடைசி முயற்சியாக அவரது ஆழ்மனதுடன் பேசினேன். சமீபத்தில் ஆல்ஃபா முதல் நிலை வகுப்பில் கலந்து கொண்டார். இப்பொழுது நான் ஏதாவது தவறுதலாக நெகடிவ்வாக சொன்னாலும் அவர் என்னை திருத்துகிறார். இது எனது வாழ்வில் மிகப் பெரிய விஷயம். எல்லாம் **ஆல்ஃபாவினால்** தான். நன்றி.

**Feedback - Devika**

After doing **Aishwaryam** class, I have written in a paper all the money that I have to receive from different people who borrowed from me and my husband and sent Aishwarya sakthi to the money. One friend borrowed Rs 5 lakhs one and half years back and never returned the money to us. By God blessings he paid back the money today. Thanks to Srimatha for teaching us Aishwaryam meditation.

**Rishikesh Yatra experience - Brindha**

**Rishikesh yatra** with Mathaji & Alpha siddhas is always a memorable one. The ashram, nearby Ganga, the neat atmosphere inside the ashram, the timely & healthy food in the ashram, all these are unforgettable. The divine baba cave, holy Haridhwar, (wherever you travel by car in Haridwar the Ganges always flows with you) is always in our sweet memories. In Swami Dhyanandh Saraswathi ashram the prayer hall is full of positive energy. Doing meditation in that ambience is a very good experience. The first time when I heard the Energy Cleansing music there, tears were rolling down my cheeks. This is the eternal satisfaction.

**Feedback - Gorries, Coimbatore**

Privileged and Humbled to receive scholarship from GOVT OF INDIA in BHARATNATYAM DANCE category. Just another small step to the journey I chose! Thanks to **Alpha** without alpha it would have been impossible what I'm today.

**Miracle of NAVAKSHARI Mantra – Santosh Puri, New Delhi**

My very dear friend had a stroke. Her right side was paralised and she lost her voice also. Myself and my husband were chanting **NAVAKSHARI MANTRA** for her. I was very upset. I visited her. She was unable to speak. I sat near her and chanted for some time. I came back with a heavy heart. I used to visualise that she is responding to me on the phone. One day I rang up her husband to enquire about her condition. I was very pleasantly surprised when he told me,"you talk to her ". I am extremely thankful to Guruji for giving us such a wonderful NAVAKSHARI Mantra for welfare of all.

**Alpha experience – Jaya**

I am really amazed at the effect of **Sanjeevani**. I attended it a couple of months back. I have been listening to the meditation every night as suggested by Guruji. Now suddenly I realise that my overall health has really improved. Earlier i was doing some yoga but the movements were never complete. Now i am able to bend fully. I donot get tired. Actually I feel much healthier. My doctor's visits have stopped completely. Thanks Guruji.

**Alpha Experience - Santhakumari**

I start with Alpha 5 years back and attended all classes. My life totally changed. I become totally positive. But i always kept worrying about my husband who is always very negative. He refused to attend Alpha. Finally i spoke to his subconscious mind and he attended Alpha recently. Now, he is correcting me when i say anything negative by mistake. This is the best thing in my life and all because of **Alpha**. Thank You.

## ONLINE PAYMENT

You can now download mobile app INNOTYM to make any payments to AMP for workshops or products.
You can also pay through our website Payment Gateway

## ஆன்லைன் கட்டணம்

INNOTYM ஆப் உங்கள் மொபைலில் பதிவிரக்கம் செய்து AMP வகுப்புகள் அல்லது பொருட்களுக்கு சுலபமாக கட்டணம் செலுத்தலாம்.
நமது இணையதளத்தின் மூலமாகவும் கட்டணம் செலுத்தலாம்.

## Workshops Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Chennai (Tamil) | **SRIVIDYA LEVEL-1** | 11/08/2018<br>12/08/2018 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Bangalore (English) | **TEJAS CHAKRA PSYCHIC ENERGY** | 18/08/2018<br>19/08/2018 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | The Fern Citadel,<br>#41,Sheshadri Road, Anand Rao Circle,<br>Bengaluru – 560 009 |
| Coimbatore (English) | **SANJEEVANI**<br>(Organised by Life Positive) | 26/08/2018 | Sun | 9am to 5pm | Hotel Grand Regent ,<br>708, Avinashi Road,<br>Coimbatore<br>To register: contact Life Positive<br>+918826466132 |
| Delhi (English) | **SRIVIDYA AISHWARYAM** | 08/09/2018<br>09/09/2018 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | The Lalit, Barakhamba Avenue,<br>Connaught Place, New Delhi - 110 001 |
| Trichy (Tamil) | **KUNDALINI MAHASHAKTHI AISHWARYAM** | 15/09/2018<br>16/09/2018 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency,<br>McDonalds Road, Trichy |
| Chennai (Tamil) | **AMRUT SIDDHI SANJEEVANI** | 22/09/2018<br>23/09/2018 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Rishikesh Yatra | **BABAJI CAVE SHANTAGNI WORKSHOP** | 30/09/2018 to 01/10/2018<br>03/10/2018 to 07/10/2018 | | | Swami Dayananda Ashram, Purani Jhadi,<br>Muni-Ki-Reti - 249137<br>Rishikesh (U.K), |
| Chennai (Tamil) | **ANUBANDAM ANUBANDAM** | 13/10/2018<br>14/10/2018 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar, Chennai |

*Printed & Published for*

*Srimatha Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*